# DEPOSITIION OF WITNESS

## (CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )

## IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR

**Case No. S.C. 128/2023**

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | PW-1/Lw-3 |
| Name | : | Mr. Karuppusamy |
| Father Name | : | Mr.Ponnusamy |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.04.2025.

எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்

அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை

1. நான் தற்சமயம் சேவூர் அருகே ஐயப்பன் கோயிலுக்கு அருகில் வசித்து வருகிறேன் நான் சாந்தி தியேட்டர் வேன் ஸ்டாண்டில் லோடுமேன் ஆக வேலை பார்க்கிறேன். மாதம் வருடம் தெரியாது ஒண்ணாம் தேதி நான் வேலைக்கு வரவில்லை. இரண்டாம் தேதி வேலைக்குச் சென்றேன். வடக்கு காவல் அதிகாரிகள் அப்பொழுது வேண் ஸ்டாண்டுக்கு வந்து என்ன நடந்தது

என்று விசாரித்துக் கொண்டிருந்தார்கள். என்னை ஒரு கையொப்பம் செய்யச் சொன்னார்கள் கையொப்பம் செய்தேன்.

2. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சம்பவத்தை பொறுத்து சாட்சி கண்ணுற்ற சாட்சியாக விசாரணையின் போது தெரிவித்துவிட்டு தற்போது எதிரிகளுடன் சேர்ந்து கொண்டு அவர்களை காப்பாற்ற வேண்டி சம்பவத்தைப் பற்றி சாட்சியமளிக்க தவறி உள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக மாற்றும் படி கேட்டுக் கொண்டார். கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞரின் கோரிக்கை பரிசோதனை செய்யப்பட்டது. வழக்கு கோப்பு ஆவணங்கள் பரிசோதனை செய்யப்பட்டு சாட்சி பிறழ் சாட்சியாக மாற்றப்பட்டார்.

<u>சாட்சியை பிறழ்சாட்சியமாக அறிவிக்க அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

1. சாட்சி போலீசார் விசாரணையில் சம்பவ சமயத்தில் சாந்தி தியேட்டர் அருகில் உள்ள செந்தில்குமார் லோடிங் வேலை செய்து வந்ததாகவும், அவ்வப்போது ஆனந்த் என்பவருடன் வேன் நிறுத்துவது சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு 1.8.2022-ம் தேதி அவருடன் வேலை செய்யும் ஆனந்த், ஜெகநாதன் ஆகியோருடன் எட்டு மணியளவில் கன்சல்டிங் முன்பு உள்ள தகர செட்டில் நின்று கொண்டிருந்தபோது, பாலமுருகன் அவருடைய வண்டிகளை நிறுத்துவது சம்பந்தமாக பிரச்சனை செய்து ஆனந்திடம் சண்டை போட்டதாகவும், அப்போது அங்கு இருந்த ஜெகநாதனும் சாட்சியும், அவர்களை சமாதானப்படுத்தி அனுப்பி வைத்த பிறகு 9.30 மணி அளவில் சாட்சியம் ஜெகநாதனும் செட்டிற்குள் இருந்தபோது ஆனந்தும் அவருடைய ஓனரின் நண்பர் சிவக்குமாரும் ஓடி வந்து போது விசாரித்ததில், பாலமுருகன் அவருடன் வேலை செய்பவர்களை கூட்டிக்கொண்டு வருவதாகவும், அப்போது பாலமுருகன், விக்கி, மணிகண்டன், முனியாண்டி, செல்வம், காளிதாஸ், கண்ணன் ஆகியோர் வந்தார்கள் என்றும், அதில் விக்கி வால் எடுத்துக் கொண்டு பாலமுருகன் மண்வெட்டியை எடுத்துக்கொண்டு

செட்டிற்குள் நுழைந்து ஆனந்தை பார்த்து கெட்ட வார்த்தையால் திட்டி ஸ்டாண்டில் வண்டியை நிப்பாட்டினால் உனக்கு என்ன பிரச்சனை என்று திட்டிக் கொண்டு முனியாண்டி செல்வம் காளிதாஸ் மணிகண்டன் மற்றும் கண்ணன் ஆகிய நான்கு பேரும் கையால் ஆனந்தை மாறி மாறி அடித்து உதைத்தார்கள் என்றும் அப்போது பாலமுருகன் மண்வெட்டியால் இத்தோடு செத்து தொலைடா நாயே என்று சொல்லி ஆனந்தின் வலது கை மணிக்கட்டிலும் பின் தலையிலும் கொத்தினால் விக்கி வாளால் ஆனந்தின் இடது கை முழங்கையில் வெட்டினார். அப்போது அருகில் நின்று இருந்த சிவக்குமார் ஏன் இப்படி அடிக்கிறீங்க என்று சொல்லி தடுத்தபோது அவரை கெட்ட வார்த்தையால் திட்டி நீயும் சாவுடா என்று சொல்லி வலது புற காதிலும், கழுத்திலும் விக்கி வாளால் மாறி மாறி வெட்டினார் என்றும், பாலமுருகன் மண்வெட்டியால் சிவக்குமாரின் வலது புறம் முன் தலையில் கொத்தினார் என்றும், அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஆனந்தையும், சிவக்குமாரையும் அடித்து வெட்டியதை சாட்சியும் ஜெகநாதனும் பயந்து கொண்டு ஓரமாக நின்று விட்டோம். ஆனந்தும், சிவக்குமாரும் வழி தாங்க முடியாமல் சத்தம் போடவே செட்டிக்கு வெளியே இருந்தவர்கள் ஓடி வருவதை பார்த்து நாங்கள் சத்தம் போட அவர்கள் அனைவரும் அங்கிருந்து ஓடி விட்டார்கள் என்றும், அப்போது பாலமுருகன் மண்வெட்டியை அங்கேயே போட்டுவிட்டு, விக்கி அவன் வைத்திருந்த வாலுடன் பாலமுருகனுக்கு சொந்தமான ஈச்சர் வண்டியில் ஏறி தப்பி சென்று விட்டார்கள் என்றும், ஜெகநாதன் நடந்த சங்கதிகளை ஓனர் செந்தில்குமாருக்கு தகவல் சொன்னார் என்றும், அவர் வந்த பிறகு காயம் பட்ட ஆனந்தையும் சிவக்குமாரையும் சாட்சியம் ஜெகநாதனும் அருகில் இருந்தவர்கள் உதவியுடன் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சைக்கு சேர்த்து இருந்தபோது மருத்துவமனையில் திருப்பூர் வடக்கு காவல் நிலைய போலீசார் விசாரித்த போது ஆனந்த் மேற்படி

சம்பவத்தை பற்றி கூறி செட்டிற்குள் அத்துமீறி நுழைந்த ஆனந்தையும், சிவகுமாரையும் கெட்ட வார்த்தையால் திட்டி கையாலும் காலாலும் அடித்து உதைத்தும் வாலாலும், மண்வெட்டியாலும் வெட்டி கொலை முயற்சி செய்த பாலமுருகன் விக்கி, மணிகண்டன், முனியாண்டி, செல்வம், காண்ணன் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கும் படி சாட்சியம் அளித்து விட்டு, தற்போது இந்த விவரங்களை பற்றி சாட்சியம் அளிக்காமல் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. ரெண்டு முதல் ஆறு எதிரிகளை நான் இதற்கு முன்பு பார்த்ததில்லை. வழக்கு சொத்தான அருவாள் மற்றும் மண்வெட்டியை ஆகியவற்றை காட்டி கேட்டபோது அவற்றை நான் பார்த்ததில்லை என்று சாட்சி கூறுகிறார்.

மறு விசாரணை: இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.04.03 19:01:40 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
திருப்பூர்.